தூங்கும் த.வெ.க. அரசைக் கண்டித்து இன்று மகளிர் அணி ஆர்ப்பாட்டம்!

ஈரோடு தெற்கு - வடக்கு மாவட்ட மகளிர் அனைவரும் திரளாகப் பங்கேற்பீர்!

மாவட்டச் செயலாளர்கள் சு.முத்துசாமி – என்.நல்லசிவம் - அறிக்கை!

ஈரோடு, அக். 31-

ஈரோடு வடக்கு, தெற்கு மாவட்ட செயலாளர்கள் என்.நல்லசிவம், சு.முத்துசாமி ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தலைமைக் கழக அறிவிப்பின்படி சட்டம் ஒழுங்குச் சீர்கேடு பெண்கள் குழந்தைகள் பாதுகாப்பின்மை மற்றும் விலைவாசி உயர்வைக் கண்டித்து ஈரோடு ஒருங்கிணைந்த தி.மு.க மகளிர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் இன்று (31.10.2026 சனிக் கிழமை) காலை சரியாக 10.00 மணிக்கு காளை மாட்டு சிலை, சிம்னி ஹோட்டல் அருகில் நடைபெறவுள்ளது.





எனவே, இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈரோடு வடக்கு, தெற்கு, மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து மகளிர் நிர்வாகிகள், மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, ஊர்க்கிளைகள் மற்றும் அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், சிறப்பு அழைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் திரளாக கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சட்டம் ஒழுங்குச் சீர்கேடு -பாலியல் குற்றங்கள்-குழந்தைகள் கடத்தல்

த.வெ.க. அரசைக் கண்டித்து திருவாரூரில் மகளிர் அணியின் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அறிக்கை!

திருவாரூர்,அக்31.

தமிழ்நாட்டில் பெருகி வரும் சட்டம் ஒழுங்குச் சீர்கேடு , பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்கள் , குழந்தைகளுக்கு பாதுகாப்பின்மை மற்றும் விலைவாசி உயர்வு உள்ளிட்ட பெருகிவரும் துயரங்களை கண்டித்து திமுக மகளிர் அணியின் சார்பில் இன்று (31.10.2026 சனிக்கிழமை) காலை 10.00 மணிக்கு திருவாரூரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது . இந்த ஆர்ப்பட்டத்தில் தலைமைக் கழக பிரதிநிதிகளாக தஞ்சை மேயர் அஞ்சுகம் பூபதி அவர்களும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார் அவர்களும் பங்கேற்க இருக்கின்றனர். இதுகுறித்து மாவட்டச் செயலாளர் பூண்டி



கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் கூறி இருப்பதாவது.

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா , மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் உள்ளிட்ட தமிழினத் தலைவர்கள் உழைப்பாலும் தியாகங்களாலும் உருவான திராவிட முன்னேற்றகழகத்தை தேர்தல் களத்தில் வீழ்த்திவிட முடியாது என்பதால் , வெறும் சினிமா மோகத்தை கைகளில் எடுத்து , தரமாற்றவர்களின் தவறான யோசனைகளின்படி பெண்களையும் , குழந்தைகளையும் பகடைக் காய்களாக்கியும் ஏமாற்றி குறுக்கு வழியில் ஆட்சிக்கு வந்த தவெக அரசு இப்போது தங்கள் வெற்றிபெற காரணமாய் இருந்த அந்த அப்பாவி பெண்களையும் குழந்தைகளையும் வஞ்சித்து வருகிறது.

பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்களை தம் கட்சி நிர்வாகிகளின் துணையோடு செய்துவருகிறது. குழந்தைகளை இரக்கமின்றி கடத்தும் கும்பலை தடுக்க மனமின்றி வேடிக்கை பார்க்கிறது. கண்ணியத்தோடு குடும்பம் நடத்திவந்த குடும்ப பெண்களை தங்களின் திறனற்ற ஆட்சி நிர்வாகத்தால் விலைவாசிகளை ஏற்றி துன்பத்தில் தள்ளி வருகிறது.

தவெக ஆட்சியின் இந்த ரீல்ஸ் மோக ஆட்சியை கண்டிக்கும் வகையில் கழகத் தலைவர் தளபதி, எதிர்கட்சித்தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர்களின் வழிகாட்டுதல்களின் படி கழக மகளிர் அணியின் சார்பில் 31.10.2026 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு , திருவாரூர் கலைஞர் பேருந்து நிலையம் அருகே உள்ள பெரியார் சிலை எதிர்புறம் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற இருக்கிறது. இந்த ஆர்ப்பட்டத்தில் தலைமைக் கழக பிரதிநிதிகளாக தஞ்சை மேயர் அஞ்சுகம் பூபதி அவர்களும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார் அவர்களும் பங்கேற்க இருக்கின்றனர்.

இந்த ஆர்ப்பட்டத்தில் கழக நிர்வாகிகள் , கழக தோழர்கள் ,பொதுமக்கள்,மகளிர்கள் அனைவரும் பங்கேற்க அன்புடன் வேண்டுகிறேன். இவ்வாறு மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

த.வெ.க. அரசின் சட்டம் ஒழுங்குச் சீர்கேட்டை கண்டித்து

மகளிர் அணி சார்பில் பெரம்பலூர் மாவட்டத்தில் ஆர்ப்பாட்டம்!

மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் வேண்டுகோள்!

பெரம்பலூர்,அக்,31

கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்புக்கு இணங்க பெரம்பலூரில் மகளிர் அணி சார்பில் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்கேட்டை கண்டித்து நாளை 31ஆம் தேதி சனிக்கிழமை கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. இது குறித்து பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

கழக துணைப் பொதுச் செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா. எம்.பி. வழிகாட்டுதல்படி தமிழகத்தில் பெண்களின் பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கு சீர்கேடு, போதைப் பொருள் புழக்கம், கொலை,கொள்ளை ஆகிய வற்றை தடுக்க தவறிய த.வெ.க. அரசைக்கண்



டித்து, தலைமை கழக அறிவிப்பின்படி இன்று 31ஆம் தேதி சனிக்கிழமை தமிழ் நாடு முழுவதும் தி.மு.க. மகளிர் அணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

பெண்களின் பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கு, போதைப்பொருள் ஒழிப்பு ,விலைவாசி கட்டுப்பாடு மற்றும் சீரான மின்சார வினியோகம் ஆகியவை ஒவ்வொரு குடும்பத்தின் அன்றாட வாழ்க்கையையும் நேரடியாக பாதிக்கிறது. நிர்வாகத் திறமையற்ற த.வெ.க. அரசின் சட்டம் ஒழுங்கு சீர்கேட்டைக் கண்டித்து பெரம்பலூர் மாவட்ட மகளிர் அணி மகளிர் தொண்டரணி சார்பில் சார்பில் இன்று (31.10.2026, சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில், பழைய பேருந்து நிலையம் காந்தி சிலை அருகே நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன்(நான்) தலைமை தாங்குகிறேன். மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால் வரவேற்புரையாற்றுகிறார்.

பாராளுமன்ற உறுப்பினர் கே.என்.அருண்நேரு முன்னாள் அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.


மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் புஷ்பவள்ளி ராஜேந்திரன் நன்றியுரையாற்றுகிறார். இதில் இன்னாள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகி கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்புக்கள், துணை அமைப்பாளர்கள், முன்னாள் இன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு ஆர்ப்பாட்டத்தை வெற்றியடைய செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



பயிர்க் கடன் தள்ளுபடி செய்ய வலியுறுத்தி திருச்சி சமயபுரம் அருகே போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகளை இருங்கலூர் அருகே போலீசார் வலுக்கட்டாயமாக கைது செய்தனர். இதனால் திருச்சி – சென்னை தேசிய நெடுஞ்சாலையில் பரபரப்பு ஏற்பட்டது.

ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்ய்யா; ஆவடி மாநகராட்சி கூட்டத்தில் அடிக்கடி கரண்டு ஆப் ஆன போது, அங்கிருந்த கவுன்சிலர்கள் எல்லாம் விசில் அடித்தார்களாமே!

போண்டி : ஆமாய்யா; ஒரே விசில் சப்தம்தானாம். மின்வெட்டுன்னா உடனே ஞாபகம் வர்றது த.வெ.க.தானே! 'கலெக்ஷன் குமார் தானே! அதான் அவங்க கட்சிச் சின்னமான விசிலை ஊதியிருக்காங்க. நிலைமை எப்படிப் போகுது பார்த்தியா.

த.வெ.க. அரசின் சட்டம் ஒழுங்குச் சீர்கேட்டை கண்டித்து

தாராபுரத்தில் மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி சார்பில் ஆர்ப்பாட்டம்!

மாவட்டக் கழகச் செயலாளர் இல.பத்மநாபன் வேண்டுகோள்!

திருப்பூர், அக். 31-

த.வெ.க. அரசின் சட்டம் ஒழுங்கு சீர் கேட்டை கண்டித்து திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரத்தில் மாவட்ட மகளிர் அணி மகளிர் தொண்டர் அணி சார்பில் ஆர்ப்பாட்டம். இதுகுறித்து மாவட்டக் கழகச் செயலாளர், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டல தலைவர் இல.பத்மநாபன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது :

தமிழகத்தில் பெண்களின் பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கு சீர்கேடு, போதைப்பொருள் புழக்கம், கொலை, கொள்ளை கண்டித்து தி.மு.க. தலைமைக் கழக அறிவிப்பின் படி, இன்று (அக்டோபர் 31-ஆம் தேதி) தமிழ்நாடு முழுவதும் தி.மு.க. மகளிர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

கழகத் தலைவர், தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்புக்கு இணங்க திருப்பூர் கிழக்கு மாவட்ட மகளிர் அணி மகளிர் தொண்டர் அணி சார்பில் அக்டோபர் 31ஆம் தேதி சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் தாராபுரம் அண்ணா சிலை அருகில் மாவட்டக் கழகச் செயலாளர் இல.பத்ம நாதன் ஆகிய எனது தலைமையில் மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர்கள் முன்னிலையில்



சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது. கழக துணைப் பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன், கழக மகளிர் அணி துணைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் கண்டன உரையாற்றுகின்றனர்.

பெண்களின் பாதுகாப்பு சட்டம் ஒழுங்கு, போதைப்பொருள் ஒழிப்பு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் சீரான மின்சார விநியோகம் ஆகியவை ஒவ்வொரு குடும்பத்தின் அன்றாட வாழ்க்கையையும் நேரடியாகப் பாதிக்கிறது. நிர்வாக திறமையற்ற த.வெ.க. அரசின் சட்ட ஒழுங்கு சீர்கேட்டை கண்டித்து தாராபுரத்தில் மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி சார்பில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகள், நகர்மன்ற, பேரூராட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளாகக் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டத்தை வெற்றியடைய செய்ய கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டல தலைவர் இல.பத்மநாபன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நிர்வாகத் திறமையற்ற த.வெ.க. அரசின் சட்டம் ஒழுங்குச் சீர்கேட்டைக் கண்டித்து

திருப்பூர் தெற்கு மாவட்ட மகளிர் அணி சார்பில் உடுமலைப்பேட்டையில் ஆர்ப்பாட்டம்!

மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி எம்.பி. வேண்டுகோள்!

திருப்பூர், அக். 31-

கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்புக்கு இணங்க திருப்பூர் தெற்கு மாவட்ட மகளிர் அணி சார்பில் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர் கேட்டை கண்டித்து உடுமலைப்பேட்டையில் இன்று (31ஆம் தேதி சனிக்கிழமை) மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம். இது குறித்து திருப்பூர் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது :தமிழகத்தில் பெண்களின் பாதுகாப்பு சட்டம் ஒழுங்கு சீர்கேடு, போதைப் பொருள் புழக்கம், கொலை, கொள்ளை கண்டித்து தி.மு.க. தலைமைக் கழக அறிவிப்பின் படி வரும் அக்டோபர் 31ம் தேதி தமிழ்நாடு முழுவதும் தி.மு.க. மகளிர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

அதன்படி திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பில் (அக்டோபர் 31ம் தேதி சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் உடுமலைப் பேட்டை நகராட்சி அலுவலகம் முன்பு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது

மின்கட்டணச் சுமையும், மறுபுறம் மின்வெட்பாலும் பாதிப்புக்கு உள்ளாகி உள்ளனர். பெண்களின் பாதுகாப்பு சட்டம், ஒழுங்கு போதைப்



பொருள் ஒழிப்பு, விலை வாசிக் கட்டுப்பாடு மற்றும் சீரான மின்சார விநியோகம் ஆகியவை ஒவ்வொரு குடும்பத்தின் அன்றாட வாழ்க்கையையும் நேரடியாகப் பாதிக்கிறது. நிர்வாக திறமையற்ற த.வெ.க. அரசின் சட்ட ஒழுங்கு சீர்கேட்டை கண்டித்து உடுமலைப்பேட்டையில் மகளிர் அணி சார்பில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மகளிர் அணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் இந்நாள், முன்னாள் பிரதிநிதிகள், கழகத் தோழர்கள் அனைவரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளாகக் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டத்தை வெற்றியடைய செய்ய கேட்டுக் கொள்கிறேன்

இவ்வாறு திருப்பூர் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



நாகை மாவட்டத்தில் மெத்தபெட்டமைன் (போதைப்பொருள்) பறிமுதல் மற்றும் அதுதொடர்பாக சர்வதேச போதை பொருள் கடத்தலுக்கு மூளையாக செயல்பட்ட தமிழக வெற்றிக் கழக (தவெக) நாகை மாவட்ட செயற்குழு உறுப்பினர் பூபாலன் கைது செய்யப்பட்டது குறித்து அச்சு மற்றும் காட்சி ஊடகங்களில் செய்திகள் வெளியாகின.இதனைத் தொடர்ந்து, செய்தி வெளியிட்ட பத்திரிகையாளர்களுக்கு மிரட்டல் விடுத்தும், காவல் நிலையங்களில் பொய் புகார்களை அளித்தும் வரும் நாகை மாவட்ட தவெக நிர்வாகிகளைக் கண்டித்து நாகப்பட்டினம் மாவட்ட பத்திரிகையாளர் மன்றம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக நடைபெற்றது. இதில் ஊடகவியலாளர் ஜீவசகாப்தன் உழைக்கும் பத்திரி கையாளர் சங்க மாநிலத் தலைவர் சகாய ராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஜி.கே.நிஜாமுதீன், மற்றும் நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சா வூர், மயிலாடுதுறை, கரூர், காரைக்கால், நாமக்கல் பத்திரிகையாளர்கள் பங்கேற்றனர்.